1987 நவம்பர் 17]

ஸ்ரீபெரும்புத்தூருக்கு பாலாற்று குடிநீர்த் திட்டம்.

154—(*வினா எண் 13730) திருமதி டி. யசோதா: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புத்தூருக்கு பாலாற்றுத் திட்டம் மூலம் குடி நீர் வழங்க அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டத் திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மதுராந்தகத்தில் நடைபெற்ற மிகப்பெரிய விழாவில் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீபெரும்புதூர் குடிநீர்த் திட்டத்திற்கு 1 கோடியே 80 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதாக எங்களுக்கு அச்சிட்ட அழைப்பிதழில் கொடுத்து இருந்தார்கள். அதனுடைய அடிப்படையில் நான் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சேர்மேனிடத்தில் அணுகிக் கேட்ட போது கூட சொன்னார்கள். பாலாற்றில் 3 கிணறுகள் தோண்டப்படுகின்றன, அவைகள் உங்கள் தொகுதி மக்களின் குடிநீருக்கு என்று சொன்னார்கள். ஆகவே, செயற்குறிப்பு தான் இருக்கிறது, இன்னும் வடிவம் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது முன்னுக்குப்பின் முரணாக எனக்கு தோன்றுகிறது. உண்மை நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2, 3 குளங்களிலிருந்து மற்றும் ஏரி, குளம், திருமங்கை ஆழ்வார் குளம், நரசிம்ம குளம் ஆகிய இந்தக் குளங்களிலிருந்து நீர் எடுக்கப்பட்டு 60 பொதுக் குழாய்களில் நீர் வினியோகம் செய்யப்படுகிறது. ஆனால் அந்தக் குடிநீர் நன்றாக இல்லை என்று ஒரு நிலைமை இருக்கிறது. பற்றாக்குறையும் இருக்கிறது. குடிக்கத் தகுதி யற்றதாக இருக்கிறது என்ற நிலைமையும் அங்கே இருக்கிறது.

ஆகவே, பாலாற்றை ஆதாரமாகக் கொண்டு இந்த ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சிக்கும் மற்றும் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 21 கிராமங்களுக்கும் 189 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அது மிக விரைவில் செயலாக்கத்திற்கு வரும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வானம் பார்த்த பூமியாக இருக்கிற காரணத்தால் குடிநீருக்கு பொது மக்கள் படுகிற துயரம் அதிகமாக இருக்கிறது. மழை பொழிந்தும் கூட அவர்களுக்கு அந்த குடிநீர்ப் பிரச்சினை இன்றைக்கும் தீர்ந்தபாடில்லை என்ற சூழ்நிலையில் இந்தத் திட்டத்திற்கு உடனடியாக செயல் வடிவம் கொடுக்க எவ்வளவு காலம் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அரசினுடைய நிர்வாக ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பியிருக்கிறது. அரசு நிர்வாக ஒப்புதலைத் தந்த உடன் இது விரைவில் செயல் ஆக்கம் செய்யப்படும்.

தஞ்சையில் விவசாயக் கல்லூரி.

155—(*வினா எண் 13935) திரு. ந. சிவஞானம் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் விவசாயக் கல்லூரி எப்போது, எங்கு ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாய கல்லூரியை ஆரம்பிக்க கொள்கையளவில் அரசு முடிவெடுத்துள்ளது. இந்தக் கல்லூரி அமைப்பதற்குரிய இடம் மற்றும் நிதிவசதி போன்ற விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.